ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

நீதிசதகமென்கிற

# வீரராகவசதகம்.

இஃது.

திரிசிரபுரம் அருட்கவி,

நா. வீரராகவதாஸரவர்களா

லியற்றியதை.

சுத்தமான பதிப்பு.

இவை.

திருச்சிறைப்பள்ளி-புக்ஷாப்.

அ. மாமுண்டியாபிள்ளை

அவர்களால்,

sanganidhi Vilakkem Press.

MADRAs.

(ரிஜிஸ்டர்காப்பிரைட்)

விலை] 1913. [அணா-2

7856.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

நீதிசதகமென்கிற

# வீரராகவசதகம்.

இஃது.

திரிசிரபுரம் அருட்கவி,

**நா. வீரராகவதாஸரவர்களா**

லியற்றியதை,

இவை.

திருச்சிராப்பள்ளி-புக்ஷாப்.

**அ. மாமுண்டியா பிள்ளை**

அவர்களால்,

Sanganidhi Vilakkem Press.

MADRAS.

(ரிஜிஸ்டர் காப்பிரைட்.)

இதன்விலை] 1911 [அணா 0-2-0.

031,1
E1

# ரிஜிஸ்தர் அறிவிப்பு.

இதனால் சகலமான அச்சுக்கூடத் தலைவர்களுக்கும் மற்றவர்களுக்கும் தெரிவிப்பதுயாதெனில்:—

திரிசிரபுரம் அருட்கவி, நா. வீரராகவதாஸரவர்களாலியற்றிய (வீரராகவ சதகத்தை.) திருச்சிைப்பள்ளி புக்ஷாப் அ. மாமுண்டியாபிள்ளையாகிய நான் ஷையாரிடம், பெடிட்டர் பாத்தியதை சகல சுதந்திரமும் கிரயமபெற்று அச்சிட்டு, கவர்ன்மெண்ட்டில் ரிஜிஸ்தர் செய்திருப்பதால் இப்புத்தகத்தை யாவது, இப்புத்தகத்துள்ள பாகங்களில் எதையாவது, பேரை மாத்தியாவது, அச்சிடதுணிவீர்களாகில் 1867—ஹு 25—வது ஆக்ட்டு 20—வது—பிரிவில்—6—வது விதியின்படி நஷ்டபாத்தியதைக்கும், கவர்ன்மெண்டாரால் விதிக்கும் கிரிமினல் தண்டனைக்கும் பாத்திரர்களாவீர்களெனத் தெரிவிக்கின்றனன்.

இப்படிக்கு,

☞ **அ. மாமுண்டியாபிள்ளை.**

புக்ஷாப்

திருச்சிைப்பள்ளி.

ஸ்ரீராமஜெயம்.

# இத்திருவள்ளூர் - வீரராகவசதகத்தினு லடங்கிய சரிதைகள்.


அவையடக்கம்
ஆழ்வார்கள்துதி
ஸ்தோத்திரம்
கடவுளிருக்கிறுரென்பது
அரங்கமுற்பத்தி [ற்பத்தி
திருவேங்கடமுடையானு
துவாரபாலகர்களுற்பததி
இராமன்-பரதன்- இலட்சு
மணன்-சத்ருக்கனிவர்க
ளுற்பத்தி [ம்
தசரதசக்ரவர்த்தியின் சாப
வாலிசுக்ரீவர்களுற்பத்தி
அநுமார்உற்பத்தி [பத்தி
இராவணன்முதல் மூவருற்
இராவணன் கைலையைப்
பெயர்த்தகதை
திரிதராட்டிரன்- பாண்டு-
விதுரன்-உற்பத்தி
வீஷ்டுமாசாரிஉற்பத்தி
பாண்டுசாபம் - பஞ்சவர்க
ளுற்பத்தி
துரியோதனுதியர்க ளுற்ப
த்தி [தை
குருபக்தியைக்காட்டும் க
அறிவில்லாதவர்களுடைய
கதை
பெண்கள்நிலை [ன்றகதை
எல்லாந்தெய்வச்செய லெ
தங்கள்வலிமை நிலையாதெ
ன்றகதை
கலியுகஉற்பத்தி
மாபலிசக்ரவர்த்திகதை
அரிச்சந்திர சக்ரவர்த்தி
கதை
சகரசக்ரவர்த்திகதை
நளச்சக்ரவர்த்திகதை
சிபிச்சக்ரவர்த்திகதை
மாரிஷிகளுற்பத்தி
விஸ்வாமித்திரர்கதை
ஔவை
கம்பர்சரிதை
காளமேகப்புலவர்சரிதை
வில்லிபுத்தூராழ்வார் சரி
தை
பிள்ளைப்பெருமா ளையங்
சாகரம் [கார்சரிதை
பெண்கள்கதை
பகவத்பக்தி
வித்வான்களின்செயலை வி
ளக்கிக்காட்டுமோர்கதை
பிறவித்துன்பம்
காமத்தால்வருமிழிவு
விரைக்கநாள்
வாரவிசேஷம்
நாள்பலன்
வியாதிகண்டநட்சத்திரம்
கிரஹப்பிரவேசஞ் செய்ய
வாகாதமாதம்
உளழ்வலி
உதயமெழுந்துபார்ப்பன
பெண்கள்சிறப்பு
இந்நூற்செய்தகாலம்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

# வீரராகவசதகம்.

## காப்பு-வெண்பா.

வேதன்றனையளித்த வீரராகவர்தம்மேல்
தீதன்றியான்சதகஞ் செப்பவே—கோதன்றிக்
கார்க்குந்திருவுடையான் கருணையுடன்வந்தெனைக்
கார்க்குந்திருவுடையான்காப்பு.

## அவையடக்கம்,

### ஆசிரிய விருத்தம்.

உற்றதொருபஞ்சினாற் சோமனெய்வதைக்காட்டி
யோதிப்புகட் டல்போலு
மோங்கிவளர்நெல்லினிடந் தண்டுளமிருக்கவிதை
யுயர்ந்தோர்க்கிங் குரைத்தல்போலுஞ்
சற்றுமறியாவீணன் களபகஸ்தூரிமணந்
தன்னையுரைத் தாடல்போலும்
ஜலமதனிலுளகுளிர்ச்சி மஹாத்யமதைசொலியவையி
ருன்காட்ட வருதல்போலு [ற்
மூற்றுமுணர்ந்தவர் முனங்கல்விகற்காவசட
மூடனுரை யாடல்போலு
முனைவீரர்தம்மு னேசுத்தபேடியர்கூடி
மூர்க்கமுடன் வருதலபோலும்
நற்றவம்போலெண்ணித் திருவள்ளூர்நகர்மேவும்
நயர்வீர ராகவன்மேற்
நானும்புன்மொழியினாற் சதகம்புகன்றனன்
நயந்துபொறுத்தருள்புரியவே.

## ஆழ்வார்கள் துதி.

நாடியருள்பூதம்பேய் பொய்கைமாரன்மழிசை
நன்மருவு பட்டர்பிரான்
நானிலம்புகழ்மங்கை வேந்தன்குலசேகரன்
நாடுமுயர் தொண்டன்பாணன்
தேடியுருங்கோதையெனு மிப்பதின்மருலகிலுள
சீர்மாந்தர் சிதரன்றனே
சிந்தித்துத்துதித்தறிய சாஸ்த்ரமிலையால்நரகிற்
சென்றவதி யுருதல்பார்த்து
வாடியுத்தரம்பெற்று வம்புவியில்பலவர்ண
வகைநீக்கி யுற்பவித்து
வளர்ஞானம்பூவிலுள சகலர்க்கும்போதித்து
வருந்தமிழை திராவிடமென
வீடருளச்செய்தவாழ் வார்களைப்போற்றினேன்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (1)

## ஸ்தோத்திரம்.

எழுத்துசொல்யாப்புவணி தொடையெனும்பஞ்ச
விலக்கியவிலக்க ணங்களாய்ந்திங்
கிதற்குறியகுறள்நிகண்டு காரிகைதொல்காப்பிய
மிசைநன்னூ லகராதியும்
வழுத்தியபல்சாத்ரமுள வதையுணர்ந்துமின்பேரிற்
வருங்கவிதை பாடவேண்டும்
வஸ்துகளறியாவசட மூடனிலும்நிர்மூடன்
வாசைகொண் டுன்னருளிறைற்
பழுத்துலவிதம்மிடம் படித்துநீதிச்சதகம்
பாடவிதிற் பிழையிருக்கில்

பத்திதவறுதினியகோணற் கரும்பெனினுஞ்சுவை
பாங்குடன் கெடாதவகைபோல்
விழித்துத்துயிலன்றிநினைத் துதிக்கயெனைக்காரப்பவ
வேண்டியே திருவள்ளூர்வாழ் [னே
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (2)

## கடவுளிருக்கிறு ரென்பது.

அகிலமிசைதனிலுளவுங் காறறினிடமசைதலு
மணுகிநற் கல்லிற்றிடமு
மியாவைஞ்சுசிசெயு மக்கினியில்வெப்பமு
மாகாயந்தோற் றுமையும்
பகிரதன்கொணர்ந்ததொரு வப்புதனிலேநெகிழ்வும்
பார்க்கும்பொரு ளியாவுமாய்வும்
பரவுமணுவிரையதனில் மாபெரியவிருக்ஷமும்
பரந்தாமன் றன்னருளினற்
சகலபொருள்களும்விளங்கி யிரவுபகலாண்டெனவித்
தாரில்நடந்தினி வரவிதைச்
சார்ந்தறிந்தன்பற்பல தெய்வமுண்டென் றுசால
சாற்றுமெந் நூலறிந்திலேன்
விகசிதமுடனரிதெய்வ மென்றேதினேன்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிறறுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (3)

## இதுவுமது.

தடமிசையிற்வரும்பாட்ட சாரிவெயிற்களையுறறுத்
தான்றங்கியாலைப் பார்க்கத்
தக்கமரத்திற்சிறிய கனியறபப்பறங்கிக்குத்
தாங்குமா பெரியகனியுந்

திடமுடனிருக்கவீண் கடவுளிலையென்றுசொலித்
திரமுடன் றுயின்றபின்னற்
றேடியம்மரத்தில்சிலகாகம் வந்தசைத்திடச்
சிலகனியு மிவடந்தூங்கு
மடமனிதன்நடுநெற்றி தன்னில்விழவலியுமுற
மாகட்வு ளவரவர்க்கு
மார்க்கமுடன்வைத்திடவு மறிவீணனறியாமல்
மாகுற்றஞ் செய்தேனென
விடந்துதித்துக்கடவு ளுண்டென்றறிந்தனன்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (4)

## அரங்கமுற்பத்தி.

இலகிடுமயோத்திநகர் பட்டங்கொண்டிடராம
னேற்றவர்க்குச் சன்மான
மினியவிதமீந்தனுப்ப வீடணர்க்குத்திரு
வாராதவினையை யிசைந்துநல்கி
குலவுபெறக்கீழ்வையாதெடுத்துபோமென்றுசொலக்
கொண்டிலங்கை செல்லுமார்க்கங்
கூர்ந்துஜலங்கழித்துவர வந்தணர்தம்மிடமீந்து
கோலிநடந் திடவிப்பிரர்
நலமுடன்கீழ்வைத்து நடக்கவீடணனெடுக்க
நடவாம லசரீரியாய்
நமக்கிங்குவப்பெனச்சொல விபீஷணன்றிருக்கோவி
நயருற்சவங் கண்டபின் [ல்
விலகியிரண்டாற்று நடுவரங்கமென்றமைந்தனர்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந்தருள் செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (5)

## திருவேங்கட முடையான் உற்பத்தி.

அந்தநாளடியர்தமக்காழி சங்கதனையிந்
தரியதிரு வேங்கடமவர்
வதுவன்றியிருக்கச் சைவர்களறுமுகவனென
வணுகித்துதித் திருக்கநாளும்
சந்ததமங்குடையவர் வந்துநமதுதெய்வமெனச்
சாற்றப்பா ஷாண்டர்கூடிச்
சம்வாதம்நேர்ந்தபினங் கிருவர்குறிதனைவைத்துத்
தான்கொளவு மவர்தெய்வமாம்
இந்தப்படியுரைத்துவைத் திரவிற்கதவடைத்துசென்
றிரவிவரத் திறந்துபார்க்க
விறைவன்றிருச்சங்கு சக்கரங்கரத்தினிற்றறித்
தெழிலுடன் விளங்கிநிற்க
விந்தைகண்டெல்லோரும் பணிந்தடியைத்துதித்தனர்
வேண்டியே திருவள்ளூர்வாழ் [கள்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே (6)

## துவாரபாலகர்க ளுற்பத்தி.

சிருடன்வைகுந்தநகர்வாயல் காக்குந்துவார
பாலகர்க ளிருவர்தாமுஞ்
சீதரன்றன்னுரைதவறி தூறுவாசரைவிடச்
சினந்தவரு மேழ்பிறப்பிற்
பாருலகில்பிறந்துமித் துருவாகிமுப்பிறப்பிற்
பகைத்தெதில் வருவீரென
பாங்குடன்கேட்கவிவர் முப்பிறப்பிற்றேவரிடம்
பரிந்திங்கு வருவோமென

நேருரையளிக்கவிரணிய னிரணியாட்சதன்
நேர்ந்தபின் னிராவணனுடன்
நேரிளையவன்கும்பகர்ண னொடுகஞ்சன்சிசுபால
னெனவுதித்த பின்னற்
வீரியங்குன்றிநின் பதமலர்வந்தடைந்தனர்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே (7)

## இராமாயணக் கதைகள்.

### இராமன்-பரதன்-இலட்சுமணன்-சத்துருக்கன் இவர்களுற்பத்தி.

சதிர்பெருமிமையவர்கள் மாரிவிகளெவரையுந்
தசக்ரீவன் கும்பகர்ணன்
ருக்கியதிக்கிரமஞ்செய தேவர்களுமயன்வாழுஞ்
சத்யலோகத் திற்சென்று
அதிதுயரைச்சொலவவருங் கைலைவாழீசனிட
மறையவவர் தான்கூட்டியே
வாழிசென்றெல்லோரு முறையிடக்கேட்டுவணத்தி
லாதிநாரண னும்வந்து
ததியில்நம்சேர்க்கையொடு தயரதற்குச்சுதனுவோம்
சார்தேவர் வானரமதாய்
தாக்கிச்சிவனநுமன்புரந்தரன் வாலிசுக்ரீவன்
ருணிரவிகிட் கிந்தையில்
விதியுடனுதிக்கக்குறை யகலுமெனப்புகன்றனர்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (8)

ஈதுரையங்ககன்றபின் னிவ்விடமயோத்திநக
ரிறைவன்றயரதன் குருசொற்போற்
யிசைந்துகலைக்கோட்டுமுனிவரையழைத்தியாகஞ்செ
வெழில்பூதம் பாயசத்துடன் [ய
சாதகமுடன்றேணியீந்த கலமுனிவாங்கித்
தார்மன்னனுல் மூவர்க்குந்
தானீயச்சொலியகல வதுபோற்செயகெர்ப்பமது
தானுகிதிங்கள் பத்தும்
போதகலச்சித்திரை நவமிபுனர்வசுவுச்சம்
பொருந்தநாரண னிராமனைய்
புகழுங்கோசலையினிட முதிக்கக்கைகையிடமாழி
பூணபரதன் சுமுத்ரைபாற
வீதமுடன்சேடன்லட்சு மணன்சங்குசத்ருக்கன்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே (9)

## தசரதசக்கரவர்த்தியின்-சாபம்.

தீதகலயோத்திநக ராளுந்தயரதன்குடிக
டமையைத்தீர்க்கக் காட்டில்
சென்றபின்வேட்டையாடிக் களைத்துகங்கைதனிற்
சென்றுபுன லருந்திநிற்க
பாதகந்தீரவந்தணச் சிறுவன்முதிருரும்
பரவுதன்றாய் தந்தையைப்
பாங்குடன்காவடியிற் றாக்கிசெல்லும்போது
பகர்கங்கை கண்டிறக்க
சாதகமுடன்றீர்த்தம் வேண்டுமெனசிறுவன்கொளச்
சத்தங்கேட் டிதுமிருகமென்

ரூர்மன்னனறிந்தம்பை விடச்சிறுவன்மடிந்திடப்பின்
றண்ணீரை யிந்துரைசெய
வேதனையுற்றிடநினக்கு ஜேஷ்டனுதகாதென்றனர்
வேண்டிபே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே (10)

## வாலி-சுக்ரீவர்க-ளுற்பத்தி.

அந்தநாளுமையவளுந் தவஞ்செய்துமீளும்வரை
யடவியுளபொய் கையிதனிற்
வாண்பாலருற்றுமூழ்கப் பெண்களாவரென
வவள்மொழிந் தானபின்னற்
வந்துருஜ்ஜஸ‍ யென்ற வானரமூழ்கப்பெண்
வானரம தாகிநிற்க
வருமையுடனிந்திரன் வந்ததன்வாலின்மேற்காதல்
வனைந்துகொண் டதனைச்சேர
சந்ததம்வாலியு முதிக்கப்பின்னிரவிவர
சார்கழுத்தின் சொகுசைக்கண்டு
தான்கூடச்சுக்ரீவன்றோனைப் புரந்தரன்சூர்யன்
றூன்ருஜ்ஜ ஸகலவிருவர்
விந்தையுடன்கிட்கிந்தைக் கரசரானார்கள்காண்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே (11)

## அநுமார்-உற்பத்தி.

அங்குநாரணனுரைத்தபடி ருத்திரன்வீர்ய
மதுவாயுவிடத் திற்பாய
வவருமஞ்சனையாளைச் சேரஸ்யாமளவர்ண
மானதொரு குண்டலமுடன்

இங்கிதமுடனிலகு மெய்யோபவீதமு
மிசையுங்கரம் விரிந்தமார்பு
மிவைகளுடனனுமன் பிறந்திடவாயுரவிக்கிரண
மேற்றுக்குளிர்ந் திடவரமதும்
பொங்கமுடனீயவநுமன் றுயையுணவதெனப்
போற்றிக்கேட் கச்செங்கனி
பொருந்தியிருந்திடவதனை யெடுத்தருந்தென்றுசொல
போந்துதய முறச்சூரியன்
விங்ஙனம்வரவிவருங் கனியென்றவன்மேற்பாய
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (12)

ஈதுநிகழ்ந்திடராகுகண் டறிந்திந்திரனிட
மியம்பக்கேட் டாதவன்றனை
விசைந்துநீர்பற்றுமென வவன்சொற்போலிவன்செய
விதையறிந்து மாருதியவர் [ய
சாதகமுடனிராகுவைப் பிடிக்கராகுவுந்
தான்றப்பி யமரர்கோன்பாற்
சாற்றவவன்கேட்டை ருவதமேறிவநுமன்
றன்கரிச்சிந்தூரப் பொட்டைப்
போதறிந்துகனியென்ற தன்மேற்பாயவிந்திரனும்
புடைக்கவச்சி ராயுதத்தினாற்
பொறிகலங்கிமாருதி மூர்ச்சித்துவிழவாயுகண்டுப்
புத்திரனை யணைத்தெடுத்து
வேதனைகொண்டிடவெவரும் வாயுபந்தனஞ்செய்ய
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (13)

சகலவுயிர்களுந்தவிக்க வட்டதிக்குப்பாலர்
சதுர்முகனிடத்திற்சென்று
தானுரைக்கவவர்கூட்டிக் காளியிடந்தனில்வந்து
தானியம்பக் காற்றுளோனும்
அகமகிழ்ந்தங்கவர் வாயுபந்தித்ததைவிடுக்க
வதையறிந்து பிரமன்றானும்
வயனரனரியாயுதம் சினதுசுதன்மேல்விட
வாவிபோகாமலென்றும்
இகமதனில்ராமதூதனு மாகிசிரஞ்சீவிபெற்
றென்னத்திரம் விடுத்திடில்
யேற்றொருமுகூர்த்தமூர்ச்சித்து பின்னெழுந்திருப்ப
னென்பட்டமும் பெருவனும்
விகத்திலிவ்விதந்திக்குப் பாலருங்கொடுத்துசெல
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனவுதையனே
வீரராகவ மெய்யனே. (14)

வலிமையுடனிவ்வரம்பெற்றனுமன்மூர்க்கனாய்
வாகுடன் மாரீவிகளை
வக்கிரமஞ்செயவவர்கள் சாபமிடத்தன்பலம்
வணுகியுள்ளொடுங்கத்தானும்
புலனறிந்தடங்கியே வெய்யவன்பாற்சென்று
போந்துநவ வியாகரணமும்
புகழ்பெறவறிந்துகிட்கிந்தை நகர்வாலிசுக்கிரீவர்க்கு
புகழ் மந்திரீ
நலமுடனமர்ந்தவர்கள் பாலிருக்கத்தன்
பராக்கிரமமது நன்குண்டாக
நாடிச்சுக்ரீவனிடம் மதங்கமலைவந்தமர்ந்து
கடித்திரா மன்றாதனாய்

விலகாமலிருக்கவிச் சரிதைபுவிக்கோதினேன்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (15)

## இராவணன் கும்பகர்ணன் விபீஷணன்

### சூர்ப்பநகை இவர்களுற்பத்தி.

தம்பிமாரிருவரையும் நாரணன்கொலச்சுமாலி
தன்மகள்கை கேசிதன்னைத்
தானழைத்துக்கொண்டுவர விச்சிரவாகுதவந்
தான்செயும் வனத்தைக்கண்டு
கும்பமுலைமாதையலங் கரித்துப்போய்ச்சேரென்ன
கோரியிவள் முனிவரெதிரிற்
கூர்ந்துபோய்நிற்கவவர் நேரமில்லையெனவிவளுங்
கூடநன் றுகுமென்ன
சம்பிரமதாய்ப்புகல சேரராவணன்பிறக்கத்
தான்கூடக் கும்பகர்ணன்
றுனுதிக்கப்பிறகிருக்க வீடணன்வரப்பிணையத்
தான்சூர்ப்ப நகையுந்தோண
வெம்பியிவர்களையெடுத்து வளர்த்துச்சுகம்பெற்றனள்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (16)

## இராவணன் கைலையங்கிரியைப்

### பெயர்த்த கதை.

அட்டதிக்குகளியாவுந் திக்குவிஜையஞ்செய
வதிக்ரமித்தவனிராவணன்
வளகேசனிடஞ்சென்று சமர்புரிந்தவன்பதியு
வவன்புஷ்பக விமானமுஞ்

சட்டமுடன்கைக்கொண்டு புஷ்பகந்தனிலேறி
தான்வானிற் செல்லக்கைலை
தடையாகநந்திசொலக் குரங்கெனச்சீறியிவன்
றன்கரங்கொண் டிருபத்திறாற்
பொட்டெனத்தூக்கமலையாட வுமையுறைக்கச்சிவன்
பொறைகொண்டு மிதிக்கக்கிரிக்கீழ்
பூமியிலழுந்தநாரதர் வந்துசொலசாம
புகழ்மறையைச் சுரம்பாடிட
வெட்டவரனீயவரந் தசக்ரீவன்பெற்றகல
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (17)

## பாரதக் கதைகள்.

### திரிதராட்டிரன்-பாண்டு-விதுரன்,

### இவர்களுற்பத்தி.

பரிமளகந்தியின்றன் மருமக்கள்விதவையுறப்
பட்டங்கொளச் சுதனில்லாமற
பார்த்தறிந்திவள்மூத்த மகன்வியாசரைநினைக்கப்
பரிந்தவரும் வந்துதாயைத்
துரிதமுடன்போற்றவவள் சொல்லைப்போலம்பிகைத
சொரிகுழலைச் சென்றுசேரச்
சொருசிவரிலாமலவள் கண்மூடப்பொட்டையாய்த் [ன்
தோன்றலபிறந் திடவிவர்வந்து
சரசமுடன்புகன்றிவர்க்குத் திரிதராட்டிரனெனச்
சாற்றப்பிற கம்பாலிகை
தன்னிடமிருக்கவிவர் செல்லவவடேசுடன்
றுனிருக்க ரோகஸ்தனைய்

இருடிபத்தினிச்சாபமிட் டவளுந்தீயில்விழ
விதையேற்றுப் பாண்டுமன்ன
னிருமனைவியவர்களிடம் புகன்றுகான்சென்றுதவ
மிசைந்துசெயச் சிலமுனிவரும்
அருகில்வந்தறிந்துமக்கு மகவில்லைதவமதே
ஞனபின் வாருமென்ன
வதுபோலரண்வந்துசுதன் குந்திதனைப்பெருகெனவு
மவ்வுரைபோலோர்மந்திரம்
பெருகிச்சொலயேமன்வர சேரத்தருமன்பிறக்கப்
பிறகொன்றைப் புகலவாயு
பேணிவரவிருக்கவீம னுதிக்கயிந்திரனாற்
பிறகர்ச்சுணன் மந்தரைபாற்
வெருவுநகுலன்சகா தேவனுமுதித்தனர்கள்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (22)

## துரியோர்தனாதியர்களுற்பத்தி.

குந்திமாதவளைந்து புத்திரரைப்பெறமூத்த
கொழுந்தனிட மனைவிகண்டு
கொண்டபோறாமையாற் நூறுவருடம்வரை
கோர்கெற்பமிதைத் தாங்கியான்
சிந்தித்திருக்கவிதிலொன்று மில்லையென்றவள்
சீக்கிரங் குழவிக்கல்லைச்
சீர்பெறயெடுத்தவ டன்வயற்றினிலிடிக்கவுந்
திகழ்குருதி காணவங்கு
நொந்தவர்வியாசரை நினைக்கவுமவர்வந்து
நோக்கித்தொண் ணூற்றென்பதும்
நகர்பதலைதன்னிலவ ளிடம்விழுமிரத்தமதை
நொடிபிடித்தங் கதைமூடியே

விந்தையுடனீரெட்டு தினமென்றவருரைத்துசெல
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (23)

## இதுவுமது.

குருவுரைத்தமொழியைப்போற்காந்தாரியவள்காற்று
கொள்ளாத விடமிலகிடுங்
கோழியடையுறுதல்போற் றன்சூடுதொண்ணூற்றொ
பதலையதனிற் கொள்ள [ன்பது
மருவியிருந்ததிலிவ்வித மிவளும்பதிளுறுதின
மர்மமறிந்தவள் கார்க்கவும்
மார்க்கமுடன்கெடுவாகி முட்டைவெடித்ததிற்குஞ்சு
மாண்புடன் வருதல்போலப்
பெருகிபதலைவெடித்துத் தொண்ணூற்றென்பதுபிள்
பிறக்ககாந்தாரி பார்த்துப் [ளை
பெருமகிழ்வுகொண்டிவர்க்கு துரியோதனுதியென
பெயரிட்டு வள்ர்க்கநாளும்
விரவுமிச்சரிதைமஹி தவமறியவிடுத்தனன்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (24)

## குருபக்தியை விளக்கிக் காட்டு மோர்கதை.

ஏகலைவனெனுமொருவன் றுரோணரிடமேவந்தாங்
கெனக்குரையும் வித்தையென்ன
வியலாதென்றுரையவவர்போற் சிலையைசெய்துதைவ
திசைபக்தியால் வித்தையை

சாகசமுடன்கற்க வர்ச்சுனன்றாய்வந்து
ஜலமகமுங் குருமேடையிற்
ருனும்விடயேகலைவன் பாணம்விடக்கிரீடியவன்
றனுமகிமையைக் கண்டாய்ந்து
வாகுடன்குருவின்மேற் வாட்டமுறவவரறிந்து
வழைத்திவடம் வேடனில்லம்
வந்துவவனுள்ள தறிந்துவலக்கைவிரலை
வாங்கிவரமீந் தகன்றபின்
வேகமுடன்குருபக்தி தவறுமற்செய்தனன்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (25)

## அறிவில்லாதவர்களுடைய சொல்லைக்கேட் டம்பலமேறிஞ் லவமானம் நேருமென்பதை யறியக்காட்டுமோர்-கதை.

திரிதராட்டிரசுதன் குருவின்மேற்றாறுசொலச்
செவ்வையுட னறிந்துதானுந்
திரல்வேந்தனிடமிருவர் பிள்ளைகளையழைத்திலங்
தேடிநிரைகொளத் திரவியம்
பரிவுடனிங்கிந்தனமோர் வாரத்தில்வருவோமெனப்
பரிந்துரைத் தனுப்பியபினற்
பரவுங்கெடுவிற்றிரித ராட்டிரனுமாரியரும்
பாண்டவரிலம் போய்ப்பார்க்க
அரியதொருவிளக்குமண மவர்வணங்கியநலமு
மதையுற்றுத் துரியனில்ல
மங்குவரவீடுகொள வரகுவைக்கோலிட்டாங்
கவர்கள்வெளி நிற்கக்கண்டு

விரியுமதிசுதர்க்குலக்கைக் கொழுந்தென்றறிந்தனன்
 வேண்டியேதிரு வள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
 வீரராகவ மெய்யனே. (26)

## பெண்கள் நிலமைபறியப்பேணிக்காட்டு மோர்கதை.

பஞ்சவரிலிளையன்வீமன் நெல்லியங்கனியைப்
 பறித்துவந் தமுதுக்கீயப்
பாங்குடனங்குற்றவர்க ளிருடிக்காகுமிதாற்
 பழுதுவரு மென்றுசொல்ல
சஞ்சலமுடன்கண்ணனை நினைக்கவவரும்வரச்
 சாற்றியதைக் கேட்டிங்கென்னுற்
சாயாதிங்குண்மைசொல சாயுமென்றைவர்சொல
 சார்ந்துகனி செல்லப்பின்னுற்
வஞ்சியுரையாலொட்டுமென் றிருக்கதுரோபதையும்
 வசம்வைத்துப் புசலக்கனியும்
வாகுடன்கீழ்விழவும் பிறகுசொலகனியொட்ட
 வஞ்சிமனமறி யார்களகாண்
விஞ்சைபுகழட்டாட்சரப் பொருளாள்வனே
 வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவொழந் தருள்செய்யெனதையனே
 வீரராகவ மெய்யனே (27)

## எல்லாம் தெய்வச்செய லென்பதை யெடுத்துக்காட்டுமோர் கதை.

திட்டமுடன்றுரியனும் பாண்டவர்களுஞ்சேர்ந்து
 சிர்சண்டை செய்யும்வேளை
தேடியரவன்கடைபலிக் குச்சம்மதிக்கசக
 தேவனமவா சைநாளுஞ்

திட்டமுடன்வீட்டைவிற் றவன்சொத்தங்கெனதென் [றுந்
தேடிப்பெற்றவ னெனதென்றுந்
தெம்புடன்சொலத்தரும னறிந்துபின்றீருமெனச்
செப்பியே தானடக்க
வெட்டவெளியாதிகடை விப்பிரர்பிறட்டுகாண்
வேண்டியேதிரு வள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவமெய்யனே. (31)

## பாகவதக்கதைகள்.

### மாபலிச்சக்கரவர்த்தி.

சோணநகராள்பிரகலாதன் மகன்விரோசனன்
சுதனெனும் மாபலியவன்
சோகமுடன்றனதுதந்தையை விஷ்ணுகொன்றதைச்
சொற்றதன் றுதையுரையைப்
பேணியுளயறிந்திவன்றன் பதியுலோர்நாரணனைப்
பெருகும்படிப் பத்திசெய்யப்
பெட்புடன்செய்தகன்று தவஞ்செய்துபிரமனிடம்
பெருகவரம் வாங்கிமீண்டு
காணப்பதிவந்தமர்ந்து சுக்கிராச்சார்யரிடங்
கருதிச்சொல வவர்வரமியக்
கண்டுகொண்டிந்திரன் பதியாளுளவேண்டும்நீர்
கனத்தில்பிர கஸ்பதியிடம்
வேணபடியீதுரைத்து கர்வமுற்றிவன்விடுக்க
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவமெய்யனே. (32)

சொல்லச்சென்றுரைக்கப் பிரகஸ்பதிகேட்டிந்திரனி
சொல்லவோர் மாதமதனிற் [டஞ்
றேனியென்பதிவிடுவே னென்றவனுரைக்கவிவர்
சூட்டச்சுக்கி ராச்சாரியர்
நல்லதென்றெத்தவிடம் வந்துபலியரசனிடம்
நடந்ததை நயத்தவாங்கு
நாடிவிண்ணவரக்கிறைவ னர்யரிடம்யோஜிக்க
நயந்துன்னூர் விடுதியென்ன
வல்லமையொடிங்கிகுரு வாக்கறிந்துவிரிஞ்சனிடம்
வரையவவ ராகாதெனா
வாடிச்சிவனிடமுற்றுப் புகலமுடியாதெனப்பின்
வாசுதேவன் பாற்சென்று
வில்லங்கமுரைக்கவவரென்பக்தன்பொறுமென்றனர்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (33)

ஈதுநிகழ்ந்திடயிந்திரன்றன் மனைவிசுற்றமோ
டிமையவரை யழைத்துவந்தாங்
கின்றதன்றந்தைமரீஷி யிடம்விட்டிவ
னேற்றெளித்தரியி னுரையைச்
சாதகமுடன்பார்த்திருக்க பலியரசன்ஜய
பேரிகை பதாகியுடனே
சமர்செய்யவிண்ணுலகு வரவிந்திரனில்லாமற்
றுன்கண்டு மூவுலகமும்
போதிவனுமாளகுரு தவமியற்றயான்செல்வேன்
போந்தமையுஞ் சுக்ரரையெனப்
புகலவவன்வேண்டவிவர் செல்லப்பின்னதிதியவனு
புரிந்தரியின் விரதஞ்செய்ய

வேதனைகண்டவர்வந்துவர மீந்துமறைந்தனர்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (34)

அதிதியவளிடமுரைத்த படியவடன்கெற்பத்தி
லரிசென்று குழந்தையாக
வவளிடமுதிக்கவவள் பதிகஸ்யமுனிகண்டு
யதிமகிழ்வுகொண்டு நோக்கிப்
பதியில்நம்சுதனுக்கு வாமனனெனப்பெயர்
பரிந்திட்டு வித்தையாவும்
பண்புடன்போதித்தபின் பிரமசரியம்பெற்றுப்
பாங்குடனிருக்க நாளும்
நிதிபெருகும்பலியரசன் நர்மதாநதிக்கரையில்
நேர்யாகஞ் செய்வேளையில்
நிமலனறிந்திதுசமயங் கார்யம்நிரைவேறுமென
நேர்ந்துமௌ வருகக்கண்டு
விதிப்படியரசன் பூசித்திருமென்றுரைத்தனன்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (35)

வடிவழகைக்கண்டுமோஹித் திவிடம்வந்தவிதம்
வையரே யுரையுமென்ன
வன்பனேயானுந்தவஞ் செய்யவேண்டும்மிடம்
வருந்திமுன் றடிப்பெறவுமியான்
கடிகிவந்தேனென வவனியகுருசுக்கிரர்
கபடநாடக னிவனுமாய்

கண்டதென்யாறுசொல சொற்படியானீவேனெனக்
கனன்றவருன் செல்வமெல்லாம்
முடிகிவிண்ணவரைச்சேரென்றவருஞ்சாபமிட
முடியரசன் கெண்டிநீரை
முகுந்தன்கரஞ்சாய்க்ககுரு வடைக்கவிவர்குத்தப்புவி
முனோர்துவின் னீரடியதாய்
விடவனந்தங்கோரடியன் றலையளந்துகாத்தனர்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெம்பனே. (36)

## அரிச்சந்திர சக்கரவர்த்தி.

நீதகலயோத்திநகரா ளரிச்சந்திரன்முன்
றிகழ்விஸ்வா மித்திரர்வந்து
செய்வேள்விதனக்குப்பொருள் வேண்டுமெனவீயப்பி
றிரும்பவெனக்கீயுமென்று [ன்
ஒதிவைத்தங்குசெலப் பின்மிருகம்பாணப்பெண்
ணுண்டாக்கி யனுப்பவவர்க
ளுரைக்கச்சினமோங்கியர சனையுதைத்தவனுலகை
யுவந்துகொண் டவரையோட்டிச்
சாதகமுடன்முனிவர்கட னுக்காய்த்தன்மனைவி
சந்த்ரமதி யவளைவிற்றுத்
தானும்பறையனுக்கடிமை யாகியிடுகாடுற்றுச்
சர்ப்பத்தால் சுதனிறக்க
வேதனையெலாந்தீர்த்துப் பின்னரசுசெய்தனர்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (37)

## சகர சக்கரவர்த்தி.

சகலநலம்பெருகிடு மயோத்திநகராள்சகர
 வரசர்க்குச் சுதனில்லாமற்
றன்மனைவியிருவருடன் றவஞ்செய்யச்சிவன்வந்து
 சார்ந்திலகு முதல்மனைவிக்கு
வகையுடனோர்சுத னிளையவடனக்கறுப
 தாயிரம்வாய்க்கு மென்று
வரையவிவர்வரவதுபோ லாகயாகமுஞ்செய்து
 வாசியின்பின் சென்றிடச்
சுகமுடன்வருகவிந்திர னறிந்துகுதிரையைச்
 சுறுக்கதாய் பாதலத்திற்
றரத்திக்கபிலமஹரிஷி தவஞ்செய்யிடங்கொண்டு
 சூட்டியிவன் கட்டிச்செல்ல
விகலறுபதாயிரவர்நிலம் வெட்டியுட்சென்றனர்
 வேண்டியே திருவள்ளூர்வாழ்
வெலயிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
 வீரராகவ மெய்யனே. (38)

சென்றங்கிவர்பரியைக்கண் டம்முனிவர்மேற்பாணந்
 தீட்டவவர் கண்டிறக்கச்
செந்தழலிலறுபதாயிர வருஞ்சாம்பராய்ச்
 சென்றிறந்த சேதிகேட்டு
அன்றரசனேடியாங் கிருடியைவணங்கவு
 மியாவுமுரைத்தக் குதிரையை
யவனும்பிடித்திவிடம்வந் தஸ்வமேதமுஞ்செய்தங்
 கரசெய்தியவன் சுதனிடம்
நன்றுடனுரைத்திறந்திட வவன்மைந்தர்க்கிதை
 நாட்டியிவன் றானுஞ்செல்ல

நளினமுடன்பகிரதன் பிறக்கவவன்றவஞ்செய்து
நற்கங்கை வரப்பூமியிற்
வென்றுமூதாதையனரச் சொர்க்கமுறச்செய்தனன்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவமெய்யனே. (39)

## நளச்சக்கரவர்த்தி.

நிடதமெனும்பதியையாள் நளச்சக்கரவர்த்திதன்
நேர்மனைவி தமயந்தியால்
நிறைந்துசனிபிடிக்க நகரிழந்திவர்கள்காண்
நேர்ந்துபர தேசியாகி
அடைவுடன்வரச்சனிய னன்னமாகிவஸ்த்ர
மதைக்கொளக் கார்க்கோடனு
மாகியரசனைக்கொத்தி விகுர்தரூபமுமாக்கி
யவர்மனைவி சுதனைநீக்கித்
திடமுடன்ரிதுபர்ணனிடஞ் சுயம்பாகியாய்ச்
சென்றிருக்கத் தமயந்திக்குத்
திருமணமுமருதரஞ்செய வருகரிதுபர்ணன்
சேர்சுயம் பாகியுடனே
விடவருகச்சனிதோன்றி நளனுக்கரசீந்தனர்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (40)

## சிபிச்சக்கரவர்த்தி.

நயமுடனயோத்தியாள் சிபிச்சக்கரவர்த்தியிடம்
நாடியிந்திரன் வேடனாய்

நாடுமக்கினிபுருவாக வரவேடன்கொள
நன்கதுவுந் தப்பியோடிப்
பயமுடனரசனிட மபயம்புகக்கிராதகன்
பார்த்துவந் ததனைக்கேட்கப்
பார்த்திபனுடுகோழித் திரவியமதுவும்
பண்புடன் றருவேன்புரு
இயலுமெனதிடம்வருக வதைத்தரேனென்றுசொல
வேற்றுநம் தசையதனிடை
யீயவேண்டுமெனதுலா நிருத்திவாள்கொண்டு
விசைந்தறுத்து வைத்திறைவனும்
வியர்த்தமாகாதேற விருவர்வரமீந்துசெல
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (41)

## மாரிஸிகளுற்பத்தி.

பெருகுமயனூர்வசியைச் சிருட்டிக்கவேபார்த்துப்
பேணியவள் மீதிற்காதல்
பெட்புடனகொளவிருவர் சேரவதிட்டர்பிறக்கப்
பெரும்வதிட்ட ரருந்ததிதனை
மருவியவர்சேரச்சத்தியும் பிறக்கச்சத்தியும்
மாபுங்கனூர் புலேச்சியை
மாண்புடன்சேரப் பராசர்பிறக்கப்பரா
சர்மச்சகந்தி தன்னைக்
கருதியுற்றுச்சேர வியாசர்பிறக்கவுங்
கனிவுடன்சதுர் மறைக்குங்
காசினியிலுளவரச ரெவர்கட்குமிவர்கள்வெகு
கனந்தங்கு மார்யரென்றும்

வெருவுமறையதுசொல்ல விதையறியவோதினேன்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (42)

போதிலுண்டானநான்முகன் கும்பம்வைத்தாங்கு
பொறையன்றி யாகஞ்செயப்
பொலியுங்கும்பத்திருந் து கலைமகளுதிக்கவயன்
புகழ்மனைவி யென்றுகொள்ள
நீதியுடன்பிறகதி லிருந்தகத்தியருதிக்க
நேர்ந்தகத்தி யரும்வாரிதி
நேர்மங்கையைச்சேரப் பெருஞ்சாகரர்பிறக்க
நேர்ந்துபின் பெருஞ்சாகரர்
எதில்வளர்சகலநலமும் பெருகுமாருரி
லிசைந்துவாழ்ந் திடுமவ்விட
மிருக்கும்பஞ்சமர்குலத்துப் புலைச்சியவளைச்சேர
வினியபகவனு முதிக்க
வேதியர்கள்புகலுமறை யீதென்றுரைத்தனன்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (43)

குணமுடன்சரிதையங்கப் படியிருக்கப்பின்
குலவுதவமுனி யென்பவர்
கூர்ந்துமறையவர்குலத் தருண்மங்கையென்பவளைக்
கூடியொருபெண் ணைப்பெற்றுக்
கணமுடன்றவஞ்செயச் சென்றபினிக்குழந்தையைக்
கண்டங்குறை யூர்ப்பறையனுங்
கனிவுடனெடுத்துவளர்க் கவ்வூர்மண்மாரிபெயக்
கதியழிந்திப் பெண்ணிருக்க

மணமுடையமேலூர்வாழ் நீதியையர்வளர்த்துவர
மாபகவன் காசியாத்ரை
மார்க்கமுடன்வந்துசத்திரந் தங்கங்கிவளும்வர
மண்டைதனிற் சட்டுவத்தாற்
விணயமுடனடிக்கரத்தங் கண்டழுதுசென்றனள்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (44)

கூறுஞ்சத்திரம்விட்டுக்காசி சென்றிவர்தீர்த்தங்
கொண்டிவிடம் வந்திருக்கக்
கோலமயில்வரப்பார்த்திங் காசைகொளவளர்ப்பவர்
குறிப்பினா லறிந்துதாமுஞ்
சாறுமுயர்தன்பெண்ணைச் சகலர்முன்பகவர்க்குத்
தானுமணஞ் செய்தபின்னற்
றூவியவடலையிற்கைவைக்க வடிவைக்கண்டு
தானாதியென் றோடப்பின்
வேறுநினைவேதுக்கென் மீதில்நீர்மையல்கொள
விடுவனோ நானுமென்று
வேகமுடன்வரவிவரும் பார்த்தெனைச்சேரசிசு
வெழில்பெற நமக்குதித்திடிற்
வீறுபுனையெறிந்துவிட் டென்பிறகேவாவென்றனர்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (45)

கிட்டித்தன்பதிபகவமுனி யுரைக்கும்வார்த்தைதனைக்
கேட்டாதி சம்மதித்துக்
கிளம்பிச்சென்றிருவரம் மடமிரவிற்கூடிடக்
கிண்டௌவை தான்பிறக்க

எட்டியக்குழந்தையை யெடுக்காமற்கணவன்பி
னேகவிதைப் பாணர்கண்டங்
கெடுத்துவளர்த்திடவிருவர் வேற்றிடஞ்சென்றிருந்தி
விசைந்துப்பை யவளுதிக்க [ட
அட்டியன்றக்குழந்தையை யெறிந்துவிட்டகல
வதையூற்றுக் காட்டுவண்ணு
ரவர்களெடுத்துவளர்க்க வவ்விந்நாள்வரைமாரி
யம்மனெனப் பூவிருக்க
விட்டிருவர்வேறிடஞ்சென் றகன்றுவழிநடந்தனர்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (46)

சத்திரந்தங்கிரா விருவருமிருந்திடத்
தானதிக மானுதிக்கத்
தாய்விட்டகன்றிருவர் வேறிடஞ்சென்றணையத்
தானுருவை தோணவன்னை
நத்திப்பாராமற்செல நானுமவள்காளியென
நானிலம் விளங்கிநிற்க
நாடியிருவருமேகியோ ரிடம்புணையவே
நற்கபிலர் பிறக்கவிட்டுச்
சித்தந்துணிந்துபின் வேறிடங்கூடவள்ளி
சேய்பிறக்கப் போட்டுப்பின்னற்
சென்றுவேறிடமிருக்கத் திருவள்ளுவர்பிறக்க
சென்றனர்க ளிருவர்தாமும்
வித்தகன்றனைத்துதிக்கும் பிரமகுலமீதென்றனன்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (47)

## விஸ்வாமித்திரர் கதை.

காசிநகரரா்ள்காதிசுதன் நூறுபுத்திரருடன்
கான்வந்து வேட்டையாடிக்
களைத்தவிடமுறும்வதிட்ட ரிடமேந்துபுனல்கேட்க
கபிலையாற் றுனுமீயக்
கூசிப்பின்னிவரன்னம் வேண்டுமெனபசுவினற்
கொண்டளிக்க விவருண்டபின்
கோரியவரத்தைப்பிடித்திட வருகவ்வுரைகேட்டுக்
கோர்முனியுங் கண்டிறக்க
நாசமாய்நூற்றுவரு மாகவரசன்கண்டு
நற்பாணம் வதிட்டர்தம்மேற்
நாடிவிடமுனிபிரமதண்ட மதைநாட்டவது
நயந்துண்டு முனியைக்கார்க்க
வீசியதைக்கண்டுதவஞ் செய்விஸ்வாமித்ரனென
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (48)

## புலவர்புராணக் கதைகள்.

ஔவையசதிக்கோவை-பாடினது;

பாண்டுநகரடுத்தகாட்டினி லௌவைவரும்வழியிற்
பசியினுற்றுன் களைத்துப்
பரிந்தவிடமாடுமேய்த்திடு மிடையனைக்கண்டு
பகர்ந்தன்ன மிடுவாயெனப்
பூண்டசொற்கேட்டிவனும் பாற்சேர்த்துக்கூழிடப்
புரிந்துண்டுசெய் நன்றியைப்
போந்தறிந்துன்பெயரைச் சொல்லெனநான்மறந்தன
புரிந்தயதி யென்பேரென

மீண்டுமுன்னூரையுரை யெனவிவனுமைவேலி
மிகவுளதென் நினைவிலென்ன
மெதிருரையிப்பேதைபெயர் விளங்கிடத்தில்லைநகர்
மேவிச்சென் றெவருமறிய
வேண்டியயதிக்கோவை பாடிவெளியிட்டனள்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (49)

## கம்பர் சரித்திரம்.

சீருயரும்புதுவைசேர் திருவெண்ணைநல்லூரிற்
சிறந்துவாழ் சங்கரன்சுதன்
செப்புஞ்சடையன்குமர ரவர்க்குத்திருவழுந்தூரிற்
றிகழுவச்ச குலமாதவன்
சாருஞ்சுதனென்பவரவர்க்குப் புத்தகந்தாங்கித்
தனில்வைர புரமாரியர்
தம்மிடம்படித்துவரப் பிரதிதினமய்யர்க்குத்
தாவிக்கம்மங் கொல்லையை
நேருடனம்மாணுக்கர் சென்றுவந்துவர-வுவச்சன்
நேர்முறைபோய்க் காத்திருக்க
நேர்ந்தப்பதியாள்காளிங்கன் பரியுங்கொல்லைதனிற்
நெடியகம்பை வந்துண
வீரியமிழந்துவச்சன் புடைத்துவைதங்கழுதனர்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (50)

அலருமிச்சிறுபையன் முறையைக்கேட்டங்கால
யம்மருங் காளியம்மை
யவளுமெழுந்தருளி சிறுவனைப்பார்த்திங்கழுவதே
னறிவியென விவருரைத்தபின்

சலனமன்றிக்கேட்டுன் நாவைநீட்டென்னவுந்
தான்செயச் சாரதையவள்
தன்கரத்தால்நாவில் பீஜாட்சரந்தனைத்
தான்வரைந்தங் ககலவிவரும்
இலகுபுகழம்மணி யிறைவன்மாவதுமாளா
யென்றுவச்சன் வசைக்கவிதனை
யிசைத்துப்பாடிடக் குதிரையிறக்கப்புவியரசன்கேட்
டிவரையழைத் திடத்தூதரை
விலகிவிடவந்தவர்களு வச்சனையங்கழைத்தனர்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (51)

தூதுவரப்பார்த்தார்யர் விசனமுறமாணுக்கன்
றுய்யனே யஞ்சவேண்டாஞ்
சோழனிடமிருவர்சென்றிட வடியன்செய்தியைத்
துரகனேகாண வல்லீர்
நீதிவசனமுரைத்த கற்றிசெலநிருபனும்
நேர்ந்தங்குபார்த்து சபையிற்
நெருங்கைகம்புடன்வரு பவனுஞ்சிறுவனைய்
நேர்ந்திருக்கப் பார்த்தங்கவையிற்
தீதுசெய்க்கம்பனிவனோ வென்றுகேட்கவுஞ்
சிறந்தவர்களா மென்னவுஞ்
செப்புமச்சபையிவருமுற மாவையேன்கொன்றனைத்
தீட்டுமெனக் கேட்கக்கம்பர்
வேதனையுறுமற்புவி வேந்தனேகேளென்றனர்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (52)

ஆரியர்கம்மங்கொல்லையைக் காத்தங்கிருக்கவு
மரசரேநும் பரியதூ
மங்குவந்தழித்தினி துறப்பினுஞ்செல்லவிலை
யதுகண்டுநான் கவிபினூற்
காரியமறிந்துபாடிடக் குதிரைமறித்தனக்
கண்டிடரென்று சொல்லக்
காசினியையாள்பவனுங் கேட்டுச்சிரித்தெம்மெதிரிற்
கனமாவுமுயிர் பெற்றிடக்
கோரிநீர்செய்பில்முன்சொன்னவைமெய்யென்றுநா
கொள்ளுவே னென்றுகூறக் [ண்
கோதன்றியிவர்கேட்டு முன்கவியைப்பின்செயக்
குதிரையுயிர் பெற்றுநிற்க
வீரியங்குன்றிச்சோழன் கண்டகமகிழ்ந்தனன்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (53)

பதியறிந்தவ்வரசன்கவிச்சக்கரவர்த்தியெனப்
பலவிருது மீந்துவைக்கப்
பரவுந்திருவெண்ணெநல்லூர் சடையனென்பவரும்
பாங்குடனீ தறிந்துகேட்டு
கதியுடன்றெரிந்துநம் சோழனிடங்கம்பர்கவிச்
சக்ரவர்த்தி யெனவிருக்கவிங்
கருதிநாம்சென்றுமுன் வான்மீகியுரைத்திட்டக்
கனத்தங்குபிராம கதையைச்
சதிர்பெருமிப்பதியுளோர்க் குதவவேண்டுமெனத்
தானெண்ணித் திகழிறைவன்பாற்
சாற்றவுஞ்சோழனுற்றுக் கம்பாகூத்தரையுந்
தானழைத்தங் கிருவர்நீரும்

விதியுடனிராமகதை செய்யுமென் றுரைத்தனன்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (54)

சோழனுரைப்படியொட்டக் கூத்தர்கவிசெயக்கம்பர்
தொடுக்காமற் றுனிருக்கத்
தோணித்திருவெண்ணை நல்லூர்சடையனரசனிடஞ்
சூட்டிவந்திருந்த வையினிற்
சூழவிங்கிராமகதை யிருபுலவர்செய்யத்தாம்
சொன்னகெடு திங்களாறுந்
துரிதமுடன்சென்றிந்நாட் செயக்கம்பர்செய்தவைவி
ஞெடுகவியொன் றுரைக்கயானும் [த்
பர்ழன்றிகேட்கவேண்டு மென்னமன்னவன்
பார்த்துக்கம்பரை விளம்பெனப்
பற்றியதைக்கேட்டிவர் பொய்யுரைக்கிலிதுநலமென்
பரிந்துதிருவணை புணைந்ததிற் [றெணிப்
வீழத்துளிதுமிதமெனச் சொலக்கூத்தர்தடுத்தனர்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (55)

அங்குநடந்ததைப்பார்த்துக் கம்பர்துளியைத்துமித
மாமென்றிங் கரைந்தவார்த்தை
யறிவீர்கள்நாளையென் றவையைவிட்டவரிலம்வந்
தங்குசரஸ்வதி யைப்போற்ற
மங்களமுடனவளுகந் தருளிநாளைவர
மர்மம்வெளி யாகுமென்று
மாண்புடனுரைத்தகவிவா ரழைத்துச்செலவறிய
மதித்தொட்டக் கூத்தர்கவியை

சங்கைகொண்டுக்கிழிக்கக் கம்பர்போய்த்தடுத்திரவிற்
றுவியே காளிபந்தந்
தான்பிடிக்கக்கவிசெய்து சூத்தரதைச்சேர்த்தெடுத்து
தான்ராமகதை செய்ததை
யிங்ஙனமுரைக்கச்சோழன் கேட்டுவிளம்புவான்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (56)

ஆதிநாரணன்காதை யானதாற்பூலோக-
மரங்கநகர் வைகுண்டமென்
றுரையவதிற்சென்றரங் கேற்றிவாருமென்றரங்
கரசனுரைபோல் வந்திவர்
ஓதவுமிவ்விடமுளோர் தில்லைசென்றேற்றுவர
வுரைத்தல்போ லிவிடம்வந்து
வுரைக்கவிவர்சேளாம லீராறுவருடம்வரை
வுற்றிருக்கக் கடவுளருளாற்
நீதியுடனந்தணச்சிறு வனைசர்ப்பந்தீண்ட
நேர்ந்துமூவா யிரவரும்
நிரையவிவர்போய்நாக பாசைமதைக்கூறியபின்
நேர்சிறுவ னெழுந்துநிற்க
வேதியர்கள்மகிழ்ந்திரா மாயணத்தையேற்றனர்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (57)

இவ்விதந்தில்லையோ ரொப்பம்வைத்திருப்பதை
யிவரெடுத்து வந்துகாட்ட
யேற்றுவினும்புலவருள சென்றுவருவீரென்ன
யாவரிடஞ்செல வேற்றதைச்

செவ்வையுடனிவர்வந்தறிவிக்க விங்குளோர்மறுக்கத்
திகழாத முனிசுவாமிக்
டிவ்யபதம்வணங்கியிவ ருரைக்கவவர்மனமுவக்கச்
சீரர்ச்சகர் மூலமாய்
ஒவ்வியாவேசம்வந்தோங்குஞ் சடகோபன்றனை
யோதவில்லை யென்றுகேட்க
வுடனறிந்தங்குசடகோப ரந்தாதிசெய
வுற்றமண்டப மியற்றப்பின்
வெவ்வினையுந்தீர வாங்குற்றவருரைத்தனர்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (58)

சேடன்மிசைபள்ளிகொளு மரங்கனுக்கர்த்தசா
மஞ்செய்த பிறகிந்நூலை
சீர்பெறவுள்வைத்தெவருங் கதவடைத்துச்சென் றுதய
திறந்துபார்த்திட நாரணன் [ந்
ஏடதனிற்கம்பர்கவி தனக்குநம்பெருமா
ளிசைந்ததை யொப்பம்வைக்கி
லேற்போமென்றுரைக்கவது போற்செய்யவாய்ந்திரு
வேற்றுசீ ராமன்கதையை [க்க
நாடியிருந்தெல்லோரும் கேட்கவிவர்வாசிக்க
நரத்துதிகண் டாசங்கிக்க
நயந்திதற்குஞாயஞ்சொலித் தீர்ந்தபின்நரசிங்க
நற்சரிதை வரமறுக்க்
வீடுபெறமார்க்கமீதென் றுரைக்கக்கேட்டனர்கள்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (59)

எல்லோருமிருந்துகேட் டிக்கதைமுடிந்தபின்
னிவர்கயப நாடரென்றங்
கிவர்க்குத்திருநாமம்புனைந்த ரங்கனைக்கண்டருளச்
திலங்குஞ்சட கோபதீர்த்தம் [செய்
சொல்லுமநற்றிருத்துளாய்ப் பிரசாதமீந்தனுப்பச்
சோழனிடம் வந்திவர்சொலத்
துரைவிற்பிறதேயத்தரசர் சபையினையழைத்துச்
சூழ்வங்கி ராமகதையை
நல்லபடிவாசித்துமுடியக் கேட்டங்குற்றவர்
நாடிக்கரிபரி சால்வையும்
நயர்வஸ்த்ராபரணபூஷண முடன்றண்டிகையாவும்
நற்கழனி யாவுமீந்து
வில்லங்கமன்றிச்சோழன் வைத்தங்கிருந்தனன்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (60)

## காளமேகப்புலவர் சரித்திரம்.

திருவரங்கம்பெரியகோவில் மடைப்பளிவேலை
செய்யும்வைணவ ரொருவருந்
திகழ்யானைக்காவலில் வசிக்குந்தாசிபின்நேயஞ்
செய்துவர வங்கறிந்தவர்
கருதியுனதிடம்வருகு மய்யங்கார்வரவொணாக்
கண்டிக்க வவள்பயந்து
கடிகியிருந்திடவரங்கநகர் சுயம்பாகிசெலக்
கண்டவளுஞ் செல்லுமென்ன
பெருகியிவர்நின்னைவிட் டிங்குபிறியேனென்னப்
பேதையவள் சிவதீட்சையும்
பெற்றிடில்வருகவென் றுரைந்திடவுமவ்விதம்
பிறகுசிவ சமயஞ்சார்ந்து

கப்புமாவணம்வந்து வீற்றிருந்துதாம்பூலங்
காசீந்து வாங்கிதானுங்
கனிவாயிற்கொண்டிருக்கவ் வூரரசன்கவியுமதி
மதுரக்கவியெனச் சொல்பவன்
ஒப்பிச்சிவிகையிலேறி விருதுகள்கூறிவர
வுவந்துகண் டோர்கள்நிற்க
வுறுதியுடனிவரிருக்கப் பார்த்துறுமியவனுமங்
கோகோநீரா ரென்னவும்
விப்பிரருங்காளமேகப் புலவரென்றனர்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (65)

சொல்லக்கேட்டக்கவிஞனதி மதுரக்கவியுமெனச்
சொலியரசன் சபையிற்சென்று
துடுக்கன்செய்யபகீர்த்திலைய யுரைத்தங்கழைக்கச்சே
தூதரைவிடுத்த பின்னற் [ல
நல்லவவையையொருங்கு செய்திருக்கச்சேவகர்
நன்கிவரை வந்தழைக்க
நான்வரேனென்றுசொலச் சென்றுமொழிந்திடவே
நாடியமைச்சனை விடுக்க [ந்தன்
அல்லென்றியிவன்வந்து வாருமென்றங்சறையவிவ
ரானபல்ல க்குமேள
மதுவும்வரவேண்டுமென வரவிருந்துசபைவருக
வரசனழை யாதிருக்க
வில்லங்கமறிந்துகவி செய்தங்காசனமுதவும்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (66)

கிட்டிமந்திரசக்தியாலிவ னிச்சிறப்பையுங்
கிளம்பிச்செப் திருக்கவேண்டுங்
கிருபையறிந்தங்குளோ ரறியாமற்கவியும்வரக்
கீர்த்தியுடன் கடைவீதியில்
அட்டியில்லாதிருந்ததை யுரையுமெனக்கேட்க
வயலகனி யாவரேனும்
வரசரேநுமதுகவிராயர்க் கெழுந்துபசரித்த
லாகாதிங்கிவர்க் கியாவும்
திட்டமுடன்றெரியிலதை யறியவேண்டுமெனவுஞ்
செப்புமட் டாவதானஞ்
சீர்பெருந்தசாவதானஞ் சோடசவதானந்
தெரியுமெனச் சிறுபிள்ளைகள்
வெட்டவெளியாய்ச்செய்வர் மேலுரையுமென்றனர்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (67)

அதனைக்கேட்டதிமதுரக் கவிராயன்சினங்கொண்டிங்
கணுகிமேற் றெரியத்தாமு
மறியவதையுரையுமென காளமேகப்புலவ
ரரிகண்டமெம கண்டமுஞ்
சதிருடனிருக்கவிதைச் செய்யவேண்டுமெனவுந்
தார்மன்னன் கேட்டுதாமே
சார்ந்துசெயவேண்டுமதின் விவரமுறையெனவிவருஞ்
சாருங்குழி நிறையோர்கஜம்
இதமுடனிருப்புக்கொப் பரையிருத்தித்தைலமு
மிசைபெற விடுத்துத்தீயை
யெறிக்கவிருப்புத்தம்பம் நடுநிருத்திப்பலகைதனி
லிவனிருக்கக் காஞ்சங்கிலி

வீதமிட்டுத்திக்குகரிக்கைக் கொடுத்துக்கவிசொலவும்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (48)

அச்சபையிலரசன்முதலி யாவருங்கேட்டவர்க
ளரிகண்ட மெமகண்டமு
மாகுமீதென்றுரைத்திவரைச் செய்யும்படியாவுஞ்செ
தறுபதுதண்டிகைப் புலவரும் [ய்
உச்சிதமுடன்சூழ்ந் திருக்கவிவர்மேலேறி
யோங்குந் திருவேங்கடவனை
வோதித்துதித்திடவவரு முகந்தருளிசெல்லவிங்
குற்றவர்க டாறுமாறுய்
இச்சையுடன்சமிசை யீந்திடவுமிவர்கவிபாட
வெல்லோரும் வியந்தறிந்துவாங்
கிறைவிமுன்பனிபோலிவர் செய்திறங்கிடவரச
னேற்றுச் சன்மானமீயா
விச்சைகொண்டப்பதிமண் மாரிபெயப்பாடினர்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (69)

## வில்லிபுத்தூராழ்வார் சரித்திரம்.

திருவளரும்பெண்ணைசனி யூருரைவைணவகுலத்
திகழ்வீரராக வச்சார்யர்
சென்றில்கும்வில்லிபுத்தூ ரிருக்கவிவருக்கிரு
செல்வருதித்திட ஜேஷ்டர்க்குக்
கருதித்திருநாமம்வில்லி புத்தூராழ்வாரெனக்
கதித்தினைரோ டிவர்களுங்

காவுமீரிருமறையு முத்தமிழுங்கார்யரிடங்
கற்றுணரவிவர் கீர்த்திகள்
பெருகியுலகெங்கும்பரவும் படியொலிக்கப்பின்
பேணிமணஞ் செய்துகூடிப்
பெருமையுடன்வாழ்கக் கொங்குலவுமாபதியரசன்
பெருகுமா பாரதஞ்செய
விரகமித்திப்பதியிலி யாருளாரென்றனன்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (70)

அம்மொழிகேட்டறிந்துசிலர் வில்லியுடனிளைஞருள
ரவர்களா லாகுமென்றங்
கறையமறையவர்குலத்து விதவையையனுப்பியவ
ளிருமனைவியைக் கலைத்துச்
செம்மையுடனெனதுநீதிக் கிசைபவரும்படிச்
செய்யெனவங் கனுப்பிவிட்டுத்
தீவிரம்மதுரைபாண்டிய னிடம்போயிதைச்சொலத்
சினந்தவர்க ளவிடம்வரிலோ
தம்மைவரச்சொல்லுமென வுரைக்கவரசனுஞ்சொலத்
தாவியிருமனை வியர்க்குந்
தாக்கியிருபிறப்பாளர் முண்டைசென்றுட்பகையைத்
தான்செய்து சொலவிருவரும்
விம்மியவர்செல்வம்பாண்டி யன்பிறித்துத்தரவருக
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (71)

வந்தவர்கடம்முடைய வழக்கைச்சொலித்தீருமென
வங்குரைக்கக் கொங்கர்கோனல்
வாருமிதுசெல்லுமென வவர்கள்வரப்பார்த்திறைவன்
வதிமகிழ்வு கொண்டுகூர்வான்
சிந்தைகளித்திருவர் மாபாரதம்பாடிவரத்
தெரிந்துநம் பொருள்பிறிக்கச்
செய்வேனியானென்றறைய கேட்டுபாரதஞ்செய்து
தீட்டிவந்துரை க்கக்கோனும்
சந்தோஷமுற்றுநமதிட மியாதுவேண்டுமெனச்
சார்வில்லி புத்தூரர்தாஞ்
சார்ந்துலகிற்கவிஞரென வெவர்வரினுங்கவிதைசொல
தான்றேர்ப்பவர் காதையான்
விந்தையுடனறுக்கத் துறடீயுமெனக்கேட்டனர்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (72)

தம்பிகுணமறிந்திவர்க்குச் சன்மானந்தரவிருதைத்
தாவியிவர் பெற்றுவாழ்ந்துத்
தானிருக்கவிப்பிரகுலத்து முண்டையும்வந்து
தான்கலைத்த துரைத்துசேர்த்து
தெம்புடனிருக்கவில்லி புத்துராரிடஞ்
சென்றெங்கும் பரிசுபெற்றச்
சிங்கமெனவநந்தகவி புலவன்வரப்பரிக்ஷித்துச்
செய்கவிக்குச் சந்தமீய
சம்பிரமதாய்ச்செய்யப் பிழைகண்டுகாதறுக்கத்
தானேகவநந்தக் கவிஞன்
றானுந்துணிந்தாதிசேடன் றனக்குச்செவியுமிலை
தானறியு மென்றுநவில

வெம்பிச்சொலுமிவன் சமத்தையறிந்தங்குவிடுத்தனர்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (73)

ஈதுநிகழ்ந்தங்கிருக்க வடதிசைக்கச்சிநக
ரிருக்கும்வைணவ ரொருவரு
மேகியாத்திரைவந்து வில்லிநகரிறைவனை
யேற்றியவர் சார்வபௌமர்
ஓதரியசிறப்பைக்கேட் டிவரிலமெய்திக்காண
வுடைவாளங் கருகிருக்க
வுவந்தறிந்தீதேதுக்கெனக் கவிஞருரைபிழைகாண
வோங்கிச்செவி கொய்வதற்கிங்
காதரமீதென்றுசொலவவர் கேட்டங்கருணைகிரி
யதிலருணை கிரிப்புலவனு
மவனிருக்கதேவரீர் வாதுசெயவெழுந்தருள
வாகுமோ வென்றுகேட்க
வேதனையிராமற்செல் வாருமென்றழைத்தனர்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (74)

சொல்லுரையறிந்திவரு மியாத்திரைசெல்பவன்
சூட்டியெமை விட்டுநீருஞ்
சுகமுடன்செல்லுமென் றிவரும்புகன்றங்ககலத்
துரைவில்லநங் நாளைப்பார்த்துச்
செல்லவேசதுரங்க சேனைபலசூழ்ந்திடச்
சீர்வழியிற் சகுனமாருய்
சிந்திக்கச்செல்பவர்க ளுளமறிந்தங்குடன்போகத்
திருவண்ணுமலை நகரமாள்

நல்லபிரபுடதேவனெனு மரசனிடமமைச்சர்
நாடியிதைப் போயுரைக்க
நளினமுடன்வில்லிபுத்தூ ரரும்வேந்தனிட
நற்சமுகங் கண்டுநோக்கி
வெல்லுங்கவிச்சிங்கமென விருதுடன்விளங்கினர்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (75)

கரியும்பரிப்பல்லக்குக் குடைசுருட்டிசாமரங்
காளாஞ்சி தறடுமுதலாய்
கனவிருதுமன்னவர்களிடம் பெற்றிவ்வுலகெலாங்
கவிச்சக்ர வர்த்தியென்றும்
பெருகிவந்திருப்பவரைப் பார்த்தரசன்வியப்புற்று
பேணிநமஸ் கரித்துவரிசைப்
பிரபலமதாயீயப்பெற் றிங்குளபுலவனிடம்
பிரீதியுடன றர்க்கஞ்செய்யத்
தெரிந்திங்குவந்தனமென் றுரைக்கக்கேட்டிறைவனு
தியக்கங்கொள வவர்சென்றபின் [ங்
சீர்பெருகத்தமதுபுலவரைப் பார்த்துநமதாகர்
செப்புந்துறவிக் கவிஞனு
விரிந்துலவுமிருவரினு மெவர்திறமென்றறிந்தனன்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (76)

அதனைக்கேட்டிங்குவந் திடும்வில்லியும்மருணை
கிரிப்புலவ னிருவர்தாமு
மாசுகவிப்புலவரிவர் திறமறியதெய்வச்செய
லாகுமேயன்றி யானுஞ்

சதிருடனுரைக்கத்தர மன்றெனச்சொல்லிறைவன்
சார்ந்துநஞ் சேதிமயன்ன
தானுஞ்சொலுமெனவிவ னென்வலிமசகமலையவர்சு
டாளுகு மென்றுகூற
கதியறிந்தவ்வேந்தன் றுறவிக்கவிஞர்க்கிதையோதி
கருதியென் னுலாகிடுங்
காரியமிருக்கிலதைக் கழறுமெனவிடுக்கவிவன்
கண்டுகொண் டறுமுகர்க்கு
விதமுடன்பூசைக்குறியன செயவும்நடுநிலையும்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (77)

வந்தவர்களுரையைக்கேட் டரசனதுபோற்செய்ய
வருணைகிரிப்புலவ னென்போன்
வகையிருக்கவில்லிபுத்தூ ரர்க்குத்தூதனுப்ப
வரவிவரைப் பார்த்தபேர்கள்
சிந்தைகளித்தெல்லோரும் வணங்கவிவர்வீற்றிருந்து
சீர்சந்தம் பாடுமென்று
செப்பிச்சீறத்துறவிக்கவிஞன்பொறுமெனவுரைத்து
திகழ்விகட பரிமளவெனும் [
அந்தமுளகவிக்குமுரி யிடியைப்போற்பாடவிவ
ரடைப்பைக் காரனும்நம்மிட
மறியுங்கவியீதென்றுரைத்திட விருவர்க்கங்குசம
ராகவிறைவன் விலக்கி
யிந்தையுடனொருவர்கவி சொலவொருவருரைசெய
வேண்டியே திருவள்ளூர்வாழ் [
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (78

அரசனுரைப்படியருணை கிரிப்புலவன்கந்தனந்
தாதிசெயவைம் பத்தொருமூன்
றுகவவன்வாய்மூடுமுன் னிவருமுரைசெய்ய
வதனைக்கண்டங் கறுமுகவனைக்
கருதிமலையைப்பார்த் துளந்துதிக்கத்திதித்தக்
கவியும்வர விவர்மயங்கக்
காசினியையாள்பவனு மிவர்செவியைக்கொய்யுமென்
கல்விக்கட லென்றுபாடச்
சரசமுடனவரிவருந் தழுவித்துறவெறிந்துவிட்டுத்
தாவியே நேயமாகித்
தன்பதியில்வந்துதுறவுற்றுச் செருக்கொழிந்துபின்
றுனிருந்து வீடுகொண்ட
விரகமுருமிச்சரிதை புவியறியவோதினேன்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வெலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (79)

## பிள்ளைப்பெருமாளையங்கார் சரித்திரம்.

பெருகுந்திருமதுரைத்திரு மலைநாய்க்கரிடமிராய்சம
பிள்ளைப்பெருமாளையங்கார்
பெயருடையதிவ்யகவியமர்ந் தரங்கனைத்துதித்துப்
பெருகியவ ரிருக்கநாளுங்
கருதியிங்கரங்கந்தனிற் றிருத்தேரிலையனுங்
கடிகியோ லக்கம்வரவுங்
கல்லினிடந்தேருழியேறி நிற்கத்திருத்தேர்
கட்டிடும் கனசிலையும்
அருகமருந்தீவத்தியதில் விழத்தீப்பிடிக்க
வங்குதென் மதுரைலிகித
ரய்யங்காரவர்கிருஷ்ண கிருஷ்ணவெனத்தன்றாசை
யறிந்தங்கு தேய்க்கவிவிடம்

விரையமன்றித்திருத்தேர்வர வரங்கன்கோவில்கொள
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (80)

சுற்றியங்குள்ளவர்க ளிதையறிந்தங்கிவருக்குத்
தோணிப்பித் ததுவுமாந்திச்
சூட்டிவந்தெய்தவித மறிந்திலோமியாமுணரச்
சொல்லுமென் றிவரைக்கேட்கப்
பற்றிமேல்நடந்தகதையை யுரைக்கப்பலர்மகிழ்ந்து
பாரரசன்நாய்க்க ரிடம்போய்ப்
பாங்குடன்வரையவவர்கேட் டய்யங்காரவரைப்
பார்த்தழைத்தங் கியாதுரைப்பான்
நற்றவம்போலரங்க நகரேகநீரிவ்விடம்
நவிலச்சிலர் நடந்ததென்ன
நாடியுரையெனவிவரும் நான்செல்லவிலையவிடம்
நடந்ததையங் குரையதுசெய
வெற்றித்தார்வேந்தனிட முற்றதிதுமெய்யென்றனர்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (81)

எல்லோருமுரையுமிவ ருரையும்பத்தியறிந்தரச
னெய்தியகன் றிருந்தபின்னர்
யேகிச்சிலதினங்கழித்தங் கிறைவன்வந்தய்யங்கா
ரினையடியைத் தெண்டனிட்டு
நல்லரணஞ்சென்று திரு மலைநாய்க்கர்துயிலரர
நாடிச்சீரங்கஞ்செல்ல
நயருந்திருக்காவேரிதனி லரங்கதாஸரவர்
நன்குதீர்த் தங்களாடித்

தொல்லைவினைதீர்க்க வரங்கனைப்பார்க்கவிவர்காண
 தொடர்ந்திவரு மவருஞ்சேர்ந்து
துய்யனடிபோற்றியகிழ்ந் தவரவிவரகலத்
 தோணியிவர் கனவுகண்டு
வில்லையென்பதையறி யவிழித்துப்பார்த்திருந்தனர்
 வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலைபிற்றுயிலவெழுந் தருள்செய்பெனதையனே
 வீரராகவ மெய்யனே. (82)

போதுதயங்கண்டரசன் மணவாளதாஸரிடம்
 போந்துவந் திவரைநோக்கிப்
பொன்னடியைப்பணிந்திறைவ னபசாரஞ்செய்தமை
 பொறுத்தெனு லாகுங்கார்யம் [யை
நீதியுடன்நிகழ்த்திடவப்படிச்செய்வேனென்றுரைக்க
 நேர்ந்திருவரு மரங்கவாசம்
நிமலனிடசேவைதீர்த்தப் பிரசாதமுதவ
 நீரெமக்கங் கருள்வீரென
சாதகமுடன்கேட்டு நாய்க்கரதுபோற்செய்பத்
 தானரங்க மெய்திவிடலன்
றன்பேரிற்கவிபாடிதிவ்ய கவிபிள்ளைபெருமா
 ளையங்கா ரெனப்பலர்
வேதனையிராமற்சொல கீர்த்திபெற்றிங்கிருந்தனர்
 வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
 வீரராகவ மெய்யனே. (83)

சாலவும்றிந்திதனை யானைக்காவலில்வசிக்குஞ்
 சைவர்கடம் கடவுள்பேரிற்
றுக்கியோர்கவிதைபெற வேண்டுமெனவந்தறைய
 தானிவர் தடுக்கவேகிக்

காலமறிந்தவர்களாவைப் பிடித்தங்கொளிக்கவுங்
கருதிவிடக் கடவுள்பெயரைக்
கனிவுடன்சொலவிடுவோ மென்றுசொலவிவர்சென்
களர்மங்கை பாகனெனவும் [று
சீலமுடன்செய்கபிலையை விடுக்கப்பரத்துவஞ்
சிவனுக்கிலை யென்றுசாற்றச்
செய்தியறிந்தவர்கேட்டுத் தர்க்கிக்கவிவர்பனியை
தினகரன் விலக்குமாபோற்
வேலைசெய்திவரரங்க மதனில்வந்திருந்தனர்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்பெனதையனே
வீரராகவ மெய்யனே. (84)

செய்யுங்கவியரங்கனல்லாது வேறொருவரைச்
செய்வதிலையென வைராக்யஞ்
சித்தமிசையிருக்கத்திரு வேங்கடமுடையானுஞ்
சீர்கனவிற் றோன்றிநீரும்
உய்யவேநம்பேரிற்கவி பாடுமென்றுரைக்க
வுய்த்தறிந்திவர் கேட்டுநா
மோங்குமரங்களைப்பாடும் வாயினாற்மற்கடமத்
துற்றததை பாடோமென
பையச்சொலகேட்டவருங் கண்டமாலைகளாக்கப்
பாவினால் நிவர்த்திசெய்யப்
பார்த்தரங்கன்சாதிக்கவிவர் செய்யவுரைபோற்பசு
வார்ப்பரம பதமதுபுக
வெய்யவனுலவுபுவிக்கிச் சரிதையோதினேன்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (85)

## சா க ர ம்.

சாதகமுடன்காட்டில் செல்லுமொருவனைப்புலி
தான்றுறத்தப் பயந்து
தாவியிவனோடியவ்விட முறுமோர்பாற்றுறவு
தனிலறுகம் வேரைப்பற்றிப்
போதவேதொங்கிட வுங்கிணரடியிருந்தரவு
போந்திவனை சீறிக்கொத்தப்
பொங்கிவரக்கீழ்சர்ப்ப மேற்போகப்புலிதுறத்தப்
பொல்லாங்கிலகப் பட்டுவீண்
வாதனையடைந்திவனிருக்க வறுகம்வேரை
வளைந்தெலி யுமங்கறுக்க
வப்போதுவங்குளதே னடையிலோர்துளியிவன்
வாயில்விழ மகிழ்ந்துபின்னுற்
வேதனையைமறந்தனன் சாகரமீதென்பர்காண்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (86)

## பெண்களிடமுண்மையுரைக்கலாகாதென் பதைப்பேணிக்காட்டுமோர்கதை.

பதிவுபெருமோரூரிற் வாழ்குடிகளிருவரிற்
பயிரினுல்விரோ தஞ்செய்துப்
பாங்குடனொருவனைமற்றவன் வெட்டப்புலிமதியைப்
பார்த்துரைத்தவ னிறந்தபின்
சதிருடன்கொன்றவன்பின் றன்னிலம்வந்தயர்ந்திறவி
ருன்மதியைப் பார்த்துசிரிக்கத் [ற்
தாவியிவனில்லாளுமுரை யெனவிதைச்சொலவுந்
தன்னிலப்பின் சண்டைநேர

முதிரவிவன்பெண்டீரைப் புடைக்கவவள்கூகூவென
முன்கதையைச் சொல்லியழுக
முடிகிவெகுகூட்டம்வந் தறிந்திவனேமோதியும்
முனைந்தரசன் கழுகேற்றவும்
விதியும்வரப்பெண்களிட முள்ளதுரையாதென்பர்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (87)

## பகவத்பக்தியினலுண்டாகும்பலனைக்காட்டு

## மோர்கதை.

காசினியையாள்வேந்த னிடமறையவர்தினங்
கண்டுஞ் சவர்த்திசெய்து
கடிகிவரவசர்க்குப்பிணி யகலவகலவதற்
கனதனம்பூசி னிதனிற்
நேசமுட்ன்வைத்திவருக் காடைதனமதையீய
நேர்ந்தெடுத் ததைசுமக்கா
நேருமாவணஞ்செட்டியிடம் விற்றுசெலபிறகு
நேர்கொள் பாகவதர்வந்து
பூசினியைவாங்கதனமுற கைங்கர்யஞ்செய்து
புரமிருக்க வேதியர்வந்து
பூமன்னனைப்பார்த்துக் குசலமறிந்தியாவரையும்
போந்தழைத் தரியினருளால்
வீசியபதம்பெற்றக்கதை யிதுவுமென்பர்காண்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (88)

## வித்வான்களினுடையசெயலைவிளக்கிக் காட்டுமோர்கதை.

அம்புவியில்வித்தைக்கு மூலதனமாயுள்ள
வளவைப்ரசங்கஞ் செய்தாங்
கடவிதனில்வரவெயிற்கண் டங்குள்ளநாவமரத்
தமர்ந்தபின்மேற் சிறுவன்காணத்
தம்பிசிலபழம்போடென சுட்டதுஞ்சுடாததுந்
தானுளசுடா தென்னவுந்
தானுமணலெறியவெடுத் தூதசிறுவன்சிரிக்கத்
தான்கலங்கி வறிந்துசெல்லச்
சம்பிரமதாகமுன்னோர் செயலையறியாமற்
றாரிற்கவிப் புலவரென்றுந்
தன்சமர்த்துங்கல்வியின் சமர்த்துஞ்சேர்த்துத்
தங்கள்வயர் பிழைப்பர்கண்டாய்
வெம்பிமனதயர்ந்துனது பதமலரைப்போற்றினேன்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (89)

## பிறவித்துண்பம்.

எழும்புகடையானைவரை யுளஜீவராசிக
ளெண்பத்தி நான்குலட்ச
மிப்பதியிலாண்பெண்ணென் றிருவகைசெய்திவருக்
கின்பமுடன் மோகமூட்டிக்
கூழம்புகொண்டிருவருஞ் சேர்ந்துப்புணர்ந்திடக்
கூசாமல் யோநிவழியாய்க்
குவலயந்தனில்வரவதைப் பார்க்கவதிலுறக்
கூடிகொண்ட விடத்திற்புகத்

ஆறும்புபோல்யோநி வழியாய்வரயித்தேகமுந்
தோலெலும் பிறைச்சிரத்தந்
தூர்நாற்றங்கொண்டயித் தேகத்தாலுந்தனைத்
துதிக்கவுங் கூசுதையோ
வெறும்பனெனையிதைநீக்கிவேறுசெயல்செயவரிதோ
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (90)

## காமத்தால் வருமிழிவு.

மங்கையர்கள்யோநிமிசை தேன்ஜீனிசக்கரைபால்
மதுரமதிருக் கின்றதா
மதிமூத்திரங்குருதிசீழ் வேர்வைசுரோணிதம்
மாசூடுதுர்க் கந்தமுஞ்
சங்கையற்றிருக்கவிது களையறிந்தறியாமற்
றனமீந்துகுந்தி வழியைத்
தான்பார்த்துத்தூதுவிட்டுக் கனவிலுருபார்த்துத்
தானுஞ்சுவ ரேறிவீழ்ந்து
வங்கணம்பேசியவள் கீாலில்விழயிக்களவை
வறிந்துசெறுப் பாலடிக்க
வையையோவாங்கியே மூத்திரக்குழியினூற்
வந்ததிது போருமென்று
வெங்கரெவர்களும்மினையார் மோகத்திலேமடிவர்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (91)

## விரைக்க நாள்.

நல்லரோகணியாதிரை பூசமூத்திரம்
நயருத்திராட மோனம்
நாடுமவிட்டஞ்சதய முத்திரட்டாதிதனில்
நஞ்சைநடவுக்கு நன்றும்

சொல்லிடும்பரணிகிர்த்திகை யாயில்யமகஞ்
சூட்டும்பூரம் விசாகஞ்
சுடர்மூலம்பூராடம் பூரட்டாதியிதனிற்
றோணிக்கிழங் கிடவுநன்றும்
அல்லலில்லையசுவனியு மிருகசீரிடமஸ்த
மானசித் திரைசுவாதி
யநுடங்கேட்டைரேவதி யில்பயிறுகாய்தான்ய
மாமிதைச்செய்ய நன்றும்
வில்லங்கமில்லையிதனிற் விரைக்கமிகநன்மையாம்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (92)

## வாரவிசேஷமதின் குணம் நிறமறிய விவரம்.

பிடறுக்கனுத்யோகஞ்செய்ய மதிவிதைவிதைக்கப்
போர்செவ்வாய் புதன்வித்தையாம்
புகழ்குருவிற்மணஞ்செய்ய வெள்ளிமயிர்கழிக்கச்சனி
பொருந்துந்தவ மதியியாழும்
தேடறியசாத்மீகமாமவெள்ளி செம்பொன்னுந்
திகழ்ந்திடுமிராட் சதம்புதன்
சீருள்ளஞாயர்சனி தாமதம்புந்திகுரு
செயும்வெள்ளிக் கிருகண்ணுமாம்
நாடறியவேஞாயர்திங்க ளுக்கோர்கண்ணுமாம்
நயர்செவ்வாய் சனிகுருடுமாம்
நாடிவாரத்தின்பலனதின் குணமும்நிறமறிய
நயந்துரைத்ததறி வீர்கள்காண்
ஈடணனைக்கார்த்துசிரஞ் சிவீயளித்தாண்டவனே
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (93)

## நாள்பலனறியவிவரம்.

கெட்டதொருகார்த்திகையு முத்திரமுத்ராடமுங்
கிளருமிது காலற்றதாங்
கேடுவருமிருகசீரிடஞ் சித்திரையவிட்டங்
கேண்மையுட னுடலற்றதாம்
சட்டமுடனேபுனர்பூசம் விசாகம்பூரட்
டாதியிது தலையற்றதாஞ்
சாருமிவ்வொன்பதுள நாளிற்பெண்களைக்கூடிற
ருனுமலடா மனையதுங்
திட்டமுடன்கோலிலது நாசமாமியாத்திரையுஞ்
செய்யத்திரும்பா தாகுமாங்
தேடியிதையுலகோர்க்குத் தெரியமுன்னேருமிதைச்
செப்பினாறி வீர்கள்காண்
வெட்டவெளிதனிலுள விப்பரவிடுமென்னிட்டனே
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (94)

## வியாதிகண்டநட்சத்திரநாள்பலன்.

சேதம்வருஞ்சோதியொடு சதயமுப்பூரமுஞ்
சேருமாயல்யங் கேட்டைச்
சிறக்கும்பரணியாதிரை நட்சத்திரஞ்செவ்வாய்
சிர்சனியறுக் கன்றினமும்
சாதகமுமில்லைநவமி துவாதசிசதுர்த்தி
சஷ்டிதிதி யென்னுமிதுவுஞ்
சரியாகவந்தொன்றுப் கூடவிதிற்பூமாந்தர்
சார்ந்துபிணி கொள்வாராகிற்
போதவேபண்டிதர்கள் குட்டிக்கரணம்போட்டுப்
புரட்டிப்புரட் டிதைப்பார்க்கினும்
பொல்லாங்குவரவிவர்கள் சொல்லாமலோடப்பின்
பிரமன்வந்திதைப் பொறுக்கினும்

மிசைதொப்பூள்சுழியென்றுந்துடைவாழைத்தண்டெ
மிடைதனை யுடுக்கையென்றுங் [ன்று
கதவுநடையனமென்றும்கண்ணிமையைவலையென்று
கர்வுமிசைகுயிற் குரலென்றுங் [ங்
கருதுமலர்மடந்தையிவ ளென்றுமிரதியென்றும்வா
கனரம்பை யிவளென்றுமே [ன்
விதமாகப்புலவர்கன்னியரைப் பேசினர்கள்காண்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (99)

## இந்நூற்செய்தகாலம்.

நீடுங்கலியையாயிரத் தொன்பதில்வருடம்
நிரைகீலகஞ் சித்திரை
நிகழ்மாதந்தேதி யிருபத்திரண்டுமதிவாரம்
நேர்ந்திடுந் திதிசதுர்த்தி
நாடுமுயர்நட்சத்திர மிருகசீரிடம்யோகம்
நற்சுகர்மம் கரணம்வனசம்
நல்லதொருபூர்வபட்சந் சுபயோகமிவை
நளினமுடன் கூடியதினந்
தேடுமுயர்திருவள்ளூர் வீரராகவசதகஞ்
செய்துமுடித் திதையடியனுஞ்
சீர்பெருகவச்சிலிட்டு லகுளோர்க்கீந்துகன
சீர்த்திபெற விடுத்தபின்னுற்
வீடுபெறச்செய்யவிதை வாங்கிவாசித்தவர்கள்
விருப்பமுடன் கேட்டபேர்கள்
மேதினியிலெஞ்ஞான்றும் பிணியன்றிபெருவாழ்வு
மேன்மையுட னினிவாழ்வரே. (100)

திருவள்ளூர்,

கூ

## வீரராகவசதகம்.

ஸம்பூரணம்.

ஸ்ரீ

# நூதனபுத்தகங்கள்.

நவரஸ அலங்கார சங்கீதசந்திரகாச நாடகம். ம
மாமெட்டில்-480-சயிட்டில்-65-ஐநிகபடத்துடன்
கலிக்கா பயிண்டுசெய்தது விலை ரூபா. 1-4

பார்ஸி இந்துஸ்தான்தமிழ்முதலிய வர்ண
டுகளால், மதுரகவி,முருகதாஸ்அவர்கள் டிரூமா
டில்செய்த40 படத்துடன்வள்ளியம்மைசுயவரம்
சந்திரகாசகும்மி
நளச்சக்கிரவர்த்திகும்மி 0-
விநாயகர்சதகம்100-பாட்டு 0-
காசியாத்திரைதீபம்படத்துடன் 0-
வள்ளியம்மைஆனந்தக்களிப்பு. 0-
சுக்கிரநாடி சோதிடஆனந்தகளிப்பும் திறவு
கோலும் குரு சிஷியதர்க்மும் சேர்ந்தது 0-6
ஜோஷியம் கற்றுக்கொள்ள சுத்தஜாதகசா
ரும்ஷம் 0-4
சுபத்திரைகலியாணக்கும்மி. 0-2
அம்பரிஷிசரித்திரக்கும்மி. 0-2
போஜனசம்பிரதாயக்கும்மி
குசேலருபாக்கியான சரித்திரக்கும்மி. 0-
தாயமானவர்சரித்திரம். 0-
பெரிய கலியாணக்கும்மி, 0-
நீதிசதகமென்கிற வீரராகவசதகம் 100-பாட்டு 0-

மேல்கண்ட புஸ்தகங்கள்வேண்டியவர்கள் நே
லும், வி பி. போஷ்டுமூலமாகவும் இதனடியில்கண்
விலாசதாரிடம்பெற்றுக் கொள்ளலாம்.

விலாசம்.

அ மாமுண்டியாபிள்
புக்ஷாப்
திருச்சினுப்பள்ளி.